# தேசபக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:166 ★17.10.2026 ★தமிழ் நாளிதழ் ★சனிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:166 ★17.10.2026 ★TamilDaily ★Saturday ★Page-4 ★Price-₹5/- Chennai




### திருவண்ணாமலை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட

## 18 ஊராட்சிகளுக்கு கூடுதல் அடிப்படை வசதிகள்; தொழில் வளர்ச்சிக்கு கடனுதவி வழங்க வேண்டும்

### முன்னாள் ஊராட்சித் தலைவர்கள் ஆட்சியரிடம் கோரிக்கை

திருவண்ணாமலை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 18 ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளை மேலும் மேம்படுத்தவும், உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் சிறு தொழில்கள் தொடங்க அரசு கடனுதவி வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் ஊராட்சித் தலைவர்கள் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரிடம் அளித்துள்ள மனுவில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது:

திருவண்ணாமலை ஒன்றியத்தைச் சேர்ந்த 17 ஊராட்சிகளும், துரிஞ்சாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு ஊராட்சியும் என மொத்தம் 18 ஊராட்சிகள் திருவண்ணாமலை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பகுதிகளில் விவசாய நிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு, உள்ளூர் மற்றும் வெளியூர் மக்கள் பலர் குடியிருப்புகளை அமைத்துள்ளனர். இதனால் இப்பகுதிகள் நகர்ப்புறங்களைப் போல வளர்ச்சியடைந்துள்ளன. பெரும்பான்மையான மக்களின் ஒப்புதலுடன், சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதை மக்கள் வரவேற்றனர். மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பிறகு, மின்விளக்குகள் பராமரித்தல், குப்பைகளை அகற்றுதல், குடிநீர் வழங்குதல் உள்ளிட்ட அடிப்படைப் பணிகள் மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், தேவையான இடங்களில் சிறுபாலங்கள் அமைத்தல், சிறுமின்விசைப் பம்புகள் நிறுவுதல், தார்ச்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதனால் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் ஓரளவு நிறைவேறி வருவதுடன், இப்பகுதிகளில் உள்ள சொத்துகளின் மதிப்பும் உயர்ந்துள்ளது. இதற்காக மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். திருவண்ணாமலைக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து, வாரந்தோறும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமானோர் கிரிவலம் வருகின்றனர். கிரிவலப் பாதையை ஒட்டியுள்ள வேங்கிக்கால், அடிஅண்ணாமலை, ஆடையூர், ஆணாய்பி றந்தான், அத்தியந்தல் உள்ளிட்ட பகுதிகளில் பக்தர்களுக்குத் தேவை யான மின்விளக்குகள், குடிநீர், சாலை, கழிப்பறை உள்ளிட்ட வசதிகளை மேம்படுத்துவது அவசியமாக உள்ளது. இப்பகுதிகளில் நவீன அடிப்படை வசதிகளைத் தொடர்ந்து ஏற்படுத்த வேண்டும். நல்லவன்பாளையம், தென்மாத்தூர், ஏந்தல், சின்னகாங்கியனூர், சோ.கீழ்நாச்சிப்பட்டு, நொச்சிமலை, மலப்பாம்பாடி, மேலத்திக்கான், சாவல்பூண்டி உள்ளிட்ட ஊராட்சிகளிலும் கடந்த பல ஆண்டுகளாகக் குடியிருப்புகள் அதிகரித்துள்ளன. நகர்ப்புற எல்லைகளை ஒட்டியுள்ள இப்பகுதிகளில் மக்கள் தொகைக்கு ஏற்ப சாலை, குடிநீர், மின்விளக்கு, கழிவுநீர் மேலாண்மை உள்ளிட்ட வசதிகளை மேம்படுத்த வேண்டும். குறைந்த வருவாய் காரணமாக முன்பு ஊராட்சிகளால் அனைத்து அடிப்படை வசதிகளையும் முழுமையாக ஏற்படுத்துவதில் சிரமம் இருந்தது. தற்போது மாநக ராட்சியுடன் இணைக்க ப்பட்டுள்ளதால், இப்பகுதி களின் தேவைக ளைக் கணக்கிட்டு கூடுதல் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், இப்பகுதிகளில் விவசாயம் செய்வதற்கான வாய்ப்புகள் குறைந்து வருவதால், உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டும். சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களைத் தொடங்க ஆர்வமுள்ளவர்களுக்கு அரசு கடனுதவி வழங்கி, தொழில் வளர்ச்சிக்கு வழிவகை செய்ய வேண்டும். இதன் மூலம் இளைஞர்களு க்கும் குடும்பங்களுக்கும் நிலையான வருவாய் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பகுதிகளில் 100 நாள் வேலைவா ய்ப்புத் திட்ட த்தில் பணியாற்றியவர்கள் குறைந்த எண்ணிக்கை யிலேயே இருப்பதாகவும், அவர்களின் வாழ்வாதா ரத்தைக் கருத்தில் கொண்டு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, வெளிமாவட்டத்தைச் சேர்ந்த அருள்ஆறுமுகம் என்பவர், 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி சிலரைத் திரட்டி, அரசின் மக்கள் நலத்திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில் இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்படு வதாகவும், மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்து வதாகவும் மனுவில் குற்றம்சாட்ட ப்பட்டுள்ளது. இதுகுறித்து உரிய விசா ரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்க ப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 18 ஊராட்சி களின் வளர்ச்சியை விரைவுபடுத்தி, மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதுடன், வேலைவாய்ப்பு மற்றும் சிறு தொழில் வளர்ச்சிக்கும் மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் ஊராட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# மாத உதவி தொகையாக ரூ.3000 வழங்க வேண்டும்; தமிழக அரசுக்கு ஆட்டோ ஓட்டுநர்கள் கோரிக்கை

மாத உதவி தொகையாக ரூ.3000 வழங்க வேண்டும் என தமிழக அரசுக்கு ஆட்டோ ஓட்டுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக அரசு மகளிர்களுக்காக வெற்றிப்பயணம் திட்டத்தை அறிமுகப்ப டுத்தியது.

இந்த திட்டம் வந்த நாளிலிருந்தே ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் தனியார் பேருந்து ஓட்டுநர்கள் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் இன்று திண்டு க்கல் மாவட்டத்தில் ஆட்டோ ஓட்டுநர்கள் அனைவரும் இணைந்து தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசின் வெற்றிப்பயண திட்டத்தால் ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதரம் கேள்விக்குறியாகியுள்ளதாகவும், தினமும் ரூ.100 , ரூ.200 கிடைக்காமல் தவித்துக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளர். இதனை தமிழக அரசு கருத்தில் கொண்டு ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மாத உதவி தொகையாக ரூ.3000 வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.





தமிழக அரசுக்கு தான் வெற்றி பயணம் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு எல்லாம் தோல்வி பயணம் என்று ஆட்டோ ஓட்டுநர்கள் தெரிவித்துள்ளனர்.

# “தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு..” - போதைப்பொருள் கடத்தல் சம்பவத்திற்கு உதயநிதி கண்டனம்

போதைப்பொருளை கடத்த முயன்ற த.வெ.க. நிர்வாகியை ஒன்றிய அரசின் வருவாய் புலனாய்வுத்துறை கைது



செய்துள்ளது பெரும் அதிர்ச்சி அளிப்பதாக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:—

தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு வேதாரண்யத்தில் பல நூறு கோடி ரூபாய் மதிப்பிலான சுமார் 135 கிலோ மெத்தபெட்டமைன் போதைப்பொருளை இலங்கைக்குக் கடத்த முயன்ற த.வெ.க. நிர்வாகி பூபாலனை ஒன்றிய அரசின் வருவாய் புலனாய்வுத்துறை கைது செய்துள்ளது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது.

‘முதல்–அமைச்சர் Drugs–ஐ விடு Sports–ஐ எடு’ என்று மாரத்தான் ஓடினால், அவரது கட்சிக்காரர்கள், ‘முதல்–அமைச்சர் சொல்வதை விடு, Drugs–ஐ எடு’ என்று செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

பவர் சென்டர்கள்

கைது செய்யப்பட்ட பூபாலனிடம் இருந்து பல லட்சம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், அவர் ECR வழியாக பயணித்து வந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

அப்படியென்றால், அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் யார்? யார் யாரிடமிருந்து போதைப்பொருளை பெற்றார்? இலங்கை தவிர்த்து வேறு எங்கெல்லாம் விற்பனை செய்ய இருந்தார்?

ஆளுங்கட்சியின் பவர் சென்டர்களுக்கு பங்கு கொடுப்பதால் தான் இவ்வளவு தைரியமாக போதைப்பொருள் கடத்துகிறாரா?

NIA, ED

ஆட்சிக்கு வந்ததும் போதைப்பொருளை ஒழிப்பேன் என்று சொன்ன Dummy முதல்–அமைச்சர், தன் கட்சிக்காரர்களையே போதைப்பொருள் கடத்தவிட்டு வேடிக்கைப் பார்ப்பது தான் அவரது போதைப்பொருள் ஒழிப்பு லட்சணமா?

இந்த வழக்கின் முழுப்பின்னணியையும் ஆராய்ந்து இதன் பின்னால் உள்ள அனைவரது மீதும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கும் வகையில் ஒன்றிய அரசின் NIA, ED போன்ற அமைப்புகள் தீவிர விசாரணை நடத்திட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நில எடுப்பு வழக்கில் ரூ.68 லட்சம் இழப்பீடு வழங்காததால்

## செய்யாறு கோட்டாட்சியர் அலுவலக சொத்துகளை ஜப்தி செய்ய நீதிமன்றம் உத்தரவு

### அதிகாரிகள் இல்லாததால் பரபரப்பு

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு கோட்டாட்சியர் அலுவலகத்தில் நில எடுப்பு வழக்கில் இழப்பீட்டுத் தொகை வழங்காததால், கோட்டாட்சியரின் வாகனம் மற்றும் அலுவலகப் பொருள்களை ஜப்தி செய்ய நீதிமன்றம் உத்தரவிட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியு ள்ளது.

கடந்த 2001–ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத்துறை தேவைக்காக கே.எஸ். செல்வம் என்பவருக்குச் சொந்தமான 30 சென்ட் நிலம் கையகப்படு த்தப்பட்டது.

இதற்காக ரூ.1 லட்சத்து 15 ஆயிரம் இழப்பீட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்தத் தொகை போதுமா னதாக இல்லை எனக் கூறிய நில உரிமையாளர், கூடுதல் இழப்பீடு கோரி கடந்த 2003–ஆம் ஆண்டு செய்யாறு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கில், கடந்த 2024–ஆம் ஆண்டு இழப்பீட்டுத் தொகை ரூ.24 லட்சமாக மதிப்பீடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், நில எடுப்பு தொடர்பான மற்றொரு கணக்கீட்டின்படி ரூ.68 லட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படா ததால், செய்யாறு வட்ட முதன்மை சார்பு நீதிமன்ற நீதிபதி ந. சுரேஷ் உத்தரவின்பேரில் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து, நீதிமன்ற முதுநிலை கட்டளை நிறைவேற்றுநர்கள், செய்யாறு கோட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சென்று ஜப்தி நடவடிக்கைக்கான பணிகளை மேற்கொள்ள முயன்றனர். கோட்டா ட்சியரின் வாகனம், அலுவலக மேஜை, நாற்கா லிகள் மற்றும் கணினிகள் உள்ளிட்ட அசையும் சொத்துகளை ஜப்தி செய்ய உத்தரவி டப்பட்டிருந்தது.



ஆனால், அங்கு கோட்டாட்சியர் மற்றும் நேர்முக உதவியாளர் உள்ளிட்ட அலுவலர்கள் இல்லாததால், ஜப்தி நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்ப ட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால், நீதிமன்ற ஊழியர்கள் அலுவலகத்தில் தகவல் தெரிவித்துவிட்டு திரும்பிச் சென்றனர்.

நில எடுப்பு வழக்கில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாத விவகா ரத்தில், கோட்டாட்சியர் அலுவலகச் சொத்துகளை ஜப்தி செய்ய நீதிமன்றம் உத்தரவிட்ட சம்பவம் செய்யாறில் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

### தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் வட்டத்தில் வரும் 21.10.2026 ஆம் தேதி முதல் 22.10.2026ஆம் தேதி வரை

## மாவட்ட ஆட்சித்தலைவர் அனைத்துத்துறை அலுவலர்களுடன் அரசின் சேவைகள், திட்டங்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றினை கள ஆய்வு

### உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப. அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தேனி மாவட்டம். போடிநாயக்கனூர் வட்டத்தில் வரும் 21.10.2026 ஆம் தேதி புதன்கிழமையன்று காலை 9.00 மணி முதல் 22.10.2026ஆம் தேதி வியாழக்கிழமை காலை 9.00 மணி வரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அனைத்துத்துறை அலுவலர்களுடன் அரசின் சேவைகள். திட்டங்கள். அரசு அலுவலகங்கள் ஆகியவற்றினை கள ஆய்வு மேற்கொள்ளப்படும். உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள். 21.10.2026 ஆம் தேதி மாலை 4.30 மணிமுதல் 6.00 மணியளவில், போடிநாயக்கனூர் பாஸ்கரா மண்டபத்தில் பொது மக்களை நேரில் சந்தித்து, மக்களின் கோரிக்கைகளை ஏற்கவும் உள்ளார்.

மேலும், இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை தொடர்பான மனுக்களான (பட்டா மாறுதல், முதியோர் உதவித்தொகை கோருதல். விபத்து நிவாரணம், குடும்ப அட்டை கோருதல், ஆதி திராவிடர் நலத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, விவசாயத்துறை மற்றும் இதர துறைகள் தொடர்பாக) மனுக்கள் 2110.2026–ஆம் தேதி புதன்கிழமையன்று பாஸ்கரா மண்டபத்தில் பெறப்படவுள்ளது. இதில் பட்டா மாறுதல் மனுக்கள், இ –சேவை மூலம் பதிவு செய்வதற்கு ஏதுவாக போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவல கத்திலேயே உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ள ப்பட்டுள்ளது. எனவே இம்முகாமில் போடி நாயக்கனூர் வட்டத்தினை சேர்ந்த பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பாக, மனுக்களை கொடுத்து பயன் பெற்றுக்கொள்ளு மாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூ ர்த்தி. இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்யாறு அருகே

# வயலில் மாடு மேய்க்கச் சென்ற விவசாயி இடி தாக்கி பலி

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அருகே வயல்வெளியில் மாடு மேய்க்கச் சென்ற விவசாயி இடி தாக்கி உடல் கருகி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த நெல்வாய் கிராமத்தைச் சேர்ந்த கார்த்திகேயன் (55), விவசாயப் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

இவர் வழக்கம்போல் அதே கிராமத்தைச் சேர்ந்த கிஸ்டப்பநாயுடு என்பவருக்குச் சொந்தமான வயல்வெளியில் மாட்டைக் கட்டி மேய்ச்சலுக்கு விட்டிருந்தார்.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக மாலை நேரங்களில் திடீரென மழை பெய்து வருவதால், அன்று மாலையும் மழை பெய்யும் சூழல் நிலவியது. இதையடுத்து, வயல்வெளியில் கட்டி வைத்திருந்த மாட்டை அவிழ்த்து வீட்டுக்கு அழைத்து வருவதற்காக கார்த்திகேயன் சென்றதாகக் கூறப்படுகிறது.

அப்போது அப்பகுதியில் இடியுடன் கூடிய கனமழை பெய்துள்ளது. வயல்வெளியில் மாட்டை அழைத்து வரச் சென்ற கார்த்திகேயன் மீது பலத்த சத்தத்துடன் இடி தாக்கியது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தார்.

இதனை அறிந்த அப்பகுதி மக்கள் வயல்வெளிக்குச் சென்று உயிரிழந்த கார்த்திகேயனின் உடலை மீட்டனர். பின்னர், உடலைப் பிரேதப் பரிசோதனைக்காக செய்யாறு



அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இச்சம்பவம் குறித்து தகவலறிந்த வருவாய்த் துறையினர் மற்றும் அனக்காவூர் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மாலை நேரத்தில் மாட்டை அழைத்து வரச் சென்ற விவசாயி இடி தாக்கி உயிரிழந்த சம்பவம் நெல்வாய் கிராம மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மழைக்கால முன்னெச்சரிக்கை அவசியம்

வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் இடியுடன் கூடிய மழை பெய்யும்போது, திறந்தவெளி வயல்கள், மரங்களின் அடிப்பகுதிகள் மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் இருப்பது ஆபத்தானது.

இடி, மின்னல் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டால், விவசாயிகள் மற்றும் கால்நடை மேய்ப்பவர்கள் பாதுகாப்பான கட்டடங்களுக்குள் செல்ல வேண்டும். திறந்தவெளியில் இருக்கும்போது மின்னல் தாக்கும் அபாயம் அதிகரிப்பதால், வானிலை எச்சரிக்கைகளைக் கவனித்து முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.




முதலமைச்சர் கோப்பை வாலிபால் போட்டியில் 14,17 மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் வெற்றி பெற்ற மாணவிகள் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப, அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

முதலமைச்சர் கோப்பை வாலிபால் போட்டியில் 14,17 மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் வெற்றி பெற்ற கலவை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த மாணவிகள் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் மாநில அளவிலான போட்டி களிலும் வெற்றி பெற வாழ்த்தி அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய இசைவு தந்துள்ளார். இம்மாணவர்களுக்கு ஷூ மற்றும் ஜெர்சி ஆகியவற்றை வழங்க மாவட்ட ஆட்சியர் உடனடியாக உத்தர விட்டார். இதில் பங்கேற்ற மாணவிகள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மை கல்வி அலுவ லருக்கு நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ம.மோகனா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கே.ஜி.எஃப். முழுவதும் பலத்த மழை பொதுமக்கள் அவதி; அக்டோபர் 22 வரை மழை நீடிக்க வாய்ப்பு

கே.ஜி.எஃப்., அக்டோபர் 16: கோலார் மாவட்டம் கே.ஜி.எஃப். மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இன்று பலத்த மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இன்று மதியம் சுமார் 12 மணியளவில் தொடங்கிய மழை, தொடர்ந்து பெய்து வருவதால் சாலைகளில் செல்லும் வாகன ஓட்டிகள், தொழிலாளர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர். கே.ஜி.எஃப். நகரின் பல்வேறு பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன், தொடர்ந்து பெய்து வரும் மழையால் சாலைகளில் மழைநீர் தேங்கும் நிலையும் ஏற்படக்கூடும் என்பதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, பணிக்குச் சென்றவர்கள் வீடு திரும்பும்போதும், இருசக்கர வாகனங்களில் பயணம் செய்பவர்களும் மிகுந்த கவனத்துடன் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இதற்கிடையே, கே.ஜி.எஃப். பகுதியில் இந்த மழை மேலும் எத்தனை நாட்க ளுக்கு நீடிக்கும் என்ற கேள்வி பொதும க்களிடையே எழுந்துள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அக்டோபர் 16–ஆம் தேதிக்கான முன்னறிவிப்பின்படி, தெற்கு உள் கர்நாடகத்தின் பல்வேறு பகுதிகளில் அக்டோபர் 16 மற்றும் 17–ஆம் தேதிகளில் மழை பெய்ய வாய்ப்புள்ள தாகவும், தொடர்ந்து அ க்டோபர் 18 முதல் 22–ஆம் தேதி வரையிலான காலப்பகுதியிலும் பல்வேறு நாட்களில் மழைப்பொழிவு ஏற்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், கே. ஜி.எஃப். அமைந்துள்ள கோலார் மாவட்டத்திலும் அடுத்த சில நாட்களுக்கு மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது. இருப்பினும், அக்டோபர் 22–ஆம் தேதி வரை கே.ஜி.எஃப். நகரில் தொடர்ந்து இடைவிடாமல் கனமழை பெய்யும் என்று உறுதியாகக் கூற முடியாது. மழையின் தீவிரம் மற்றும் கால அளவு வானிலை மாற்றங்களைப் பொறுத்து மாறுபடக்கூடும். சில நேரங்களில் பலத்த மழையும், சில நேரங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும் என்பதால் பொதுமக்கள் வானிலை அறிவிப்புகளைத் தொடர்ந்து கவனிக்க வேண்டும். மேலும், தொடர் மழையால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கினால், பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். கால்வாய்களில் மழைநீர் தடையின்றிச் செல்கிறதா என்பதையும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிர்வாகம் கண்காணிக்க வேண்டும் என பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர். மழை பெய்யும் நேரங்களில் இடி, மின்னல் ஏற்பட்டால் திறந்தவெளிகளில் நிற்பதைத் தவிர்க்க வேண்டும். மின்கம்பங்கள் மற்றும் அறுந்து கிடக்கும் மின்கம்பிகளின் அருகில் செல்லக்கூடாது. சாலைகளில் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில் வாகனங்களை வேகமாக இயக்காமல், பாதுகாப்பாகப் பயணம் செய்ய வேண்டும். வீடுகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேங்கினாலோ, வடிகால் அடைப்பு ஏற்பட்டாலோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.



மொத்தத்தில், கே.ஜி.எஃப். பகுதியில் இன்று மதியம் சுமார் 12 மணிக்குத் தொடங்கிய மழை தொடர்ந்து பெய்து வருவதால் பொதுமக்கள் வானிலை நிலவரத்தைக் கவனித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக முன்னறிவிக்க ப்பட்டுள்ளதால், கே.ஜி.எஃப். மற்றும் கோலார் மாவட்ட மக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மழை தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கைகளை இந்திய வானிலை ஆய்வு மையம் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தெரிந்துகொள்ள வேண்டும்.



பழனி டு வத்தலகுண்டு சாலை சர்வீஸ் ரோடு பல நாட்களாக சேதமடைந்து பெரும் விபத்துக்குள்ளாகிறது பலமுறை சரி செய்து அதை முறைப்படி சரி செய்யாமல் மக்களோட வரிப்பணத்தை வீணாக்குகிறார்கள் திண்டுக்கல் ஆட்சியர் அலுவலகத்திற்கு வேலைக்கு செல்லும் அதிகாரிகள் அதிகம் இதை யாரும் கண்டு கொள்ளவில்லை பலமுறை செய்தித்தாளில் வெளியாகிவிட்டது முறைப்படி சரி செய்து மக்களுடைய உயிரை காப்பாற்றவும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் எம் ராம்குமார்

# குற்ற வழக்குகளில் சிறப்பாகப் பணியாற்றிய காவல்துறையினருக்கு எஸ்.பி. ஜெயக்குமார் பாராட்டு



திண்டுக்கல் மாவட்டம், சீலப்பாடி ஆயுதப்படை வளாகத்தில் உள்ள பழனி மஹாலில், 16.10.2026 இன்று கொலை, கொள்ளை, கஞ்சா மற்றும் குட்கா வழக்குகளில் சிறப்பாகப் பணியாற்றிய காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ஜெயக்குமார் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டினார்.

இதில், பழனி உட்கோட்டம் கீரனூர் காவல் நிலைய ஆய்வாளர் வெங்கடாசலம், உதவி ஆய்வாளர் மணி, தலைமை காவலர்கள் எம். துர்க்கையப்பன், சரவணக்குமார் மற்றும் சசிகுமார் ஆகியோர் பாராட்டுச் சான்றித ழ்களைப் பெற்றனர்.

குற்றத் தடுப்பு மற்றும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் சிறப்பாகச் செய ல்பட்ட காவல்து றையினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

காவல்துறையினரின் சிறப்பான பணிக்கு பாராட்டுகள்!



தேனி மாவட்டம் காமாட்சிபுரம் சென்டெக்ட் கே.வி. கே.வில் உழவர் மேலா நடைபெற்றது இதில் குள்ளபுரம் வேளாண் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் அர்ச்சனா, பூஜிக்கா ,தீக்ஷிதா, ஜனனிஷா, கார்த்திகா ஸ்ரீ, மாலினி ,சத்யா பர்வதா தேவி ,பொன் சூர்யா ,பிரியா, ரூபிகா, சுருதி, ஷாலினி ,விஷ்ணு ஸ்ரீ ,வித்யா ஆகியோர் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பெரிதும் உதவும் தொழில்நுட்பங்களான மீத்தேன் வாய்வு ஆலை, நீர் சுத்திகரிப்பான், இளம் தளிர் கீரைகள், சூரிய ஒளி உலர்த்தி உயிரி உரம் அதன் செய்முறை பயன்பாடுகள் நன்மைகள் போன்றவற்றை விளக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினர் .

இதில் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் பங்கேற்றார் மாணவர்களின் அறிவுத்திறனையும் விவசாயத்தில் அவர்கள் காட்டும் ஆர்வத்தையும் பாராட்டி துறை சார்ந்த அதிகாரிகள் ஊக்குவித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது



திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே கணக்கம்பட்டி ஊராட்சியில் 100 நாள் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது அருகில் உள்ள ஒரு தோப்பில் தேன்கூடு எதிர்பார்க்காக விதமாக தேனீக்கள் கலைந்தனர் அப்போது 100 நாள் வேலை செய்து கொண்டிருந்த அந்த கும்பலுக்குள் தேனீக்கள் கோட்டத் தொடங்கினர் அதில் சுமார் 32 பேரை தேனீக்கள் கொட்டியது உடனடியாக அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் பழனி அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டது இதில் சுமார் 13 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு அரசு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை செய்து வருகின்றனர்

பழநி 100 கோடி நில மோசடி வழக்கில் பத்திரப்பதிவுபழனி அலுவலக இளநிலை உதவியாளர் சிவசங்கரி மற்றும் ஒட்டன்சத்திரம் விருப்பாச்சி வழக்கறிஞர் சிவகுமார் ஆகியோர் சிபிசிஐடி போலீஸ் காவல் முடிந்த நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர் வருகின்ற 21ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவு

# வாலாஜாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தின் இறுதிக் கூட்டம்; ஐந்தாண்டு கால மக்கள் சேவைக்கு உறுப்பினர்கள் நன்றி



இராணிப்பேட்டை மாவட்டம்,வாலாஜா வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊராட்சி ஒன்றியக் குழுவின் மாதாந்திரக் கூட்டத்திற்கு ஒன்றியக் குழுத் தலைவர் சேஷா வெங்கட்ரமணன் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன் மற்றும் சிவகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் ஊராட்சிப் பகுதிகளில் குடிநீர் வசதி, சாலை மேம்பாடு, கழிவுநீர் கால்வாய் அமைத்தல், தெருவிளக்குகள் பராமரிப்பு,பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து உறுப்பினர்கள் விவாதித்தனர்.

ஒன்றியக் குழுத் தலைவர் வெங்கட்ரமணன் பேசுகையில், ஊராட்சிகளில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளில் 90 சதவீதம் நிறைவேற்ற ப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். தங்களது பதவிக்காலம் நிறைவடைந்தாலும், தொடர்ந்து மக்கள் பணியாற்ற விரும்புவதாகவும், அரசு விரைவில் உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். மேலும் தனது பதவிக்காலத்தில் கட்சி பாகுபாடின்றி அனைத்து உறுப்பினர்க ளையும் சமமாக நடத்தியதாக தெரிவித்தார். இது இறுதிக் கூட்டம் என்பதால் ஒத்துழைப்பு கொடுத்த அனைத்து உறுப்பினர்களுக்கும் சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தார்

மேலும், ஐந்தாண்டு காலப் பதவிக்காலத்தில் பொதுமக்களுக்குச் சேவையாற்ற வாய்ப்பளித்த வாக்காளர்களுக்கும், ஒத்துழைப்பு வழங்கிய அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் நன்றி தெரிவித்தனர். தங்களால் இயன்ற அளவில் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும், ஊராட்சிப் பகுதிகளின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டதாகக் குறிப்பிட்டனர்.

கூட்டத்தில் ஒன்றியக் குழு துணைத் தலைவர்,உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்




இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளி கல்வித் துறை சார்பில் மாவட்ட அளவிலான கல்வி மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.ம.மோகனா மற்றும் பலர் உள்ளனர்.

# கூட்டுறவு கடன் திட்டங்களில் ரூ.1.80 லட்சம் கோடி வழங்க இலக்கு வாரந்தோறும் சிறப்பு முகாம்கள்

## வந்தனா கார்க் அறிவிப்பு

தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் ரூ.1.80 லட்சம் கோடி கடன் வழங்கும் இலக்கை எட்டும் வகையில், வாரந்தோறும் சிறப்புக் கடன் முகாம்கள் மற்றும் கடன் மேளாக்கள் நடத்தப்பட உள்ளதாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள தகவலில், கூட்டுறவுத் துறை சார்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கடன் வழங்கும் இலக்கை எட்டுவதற்காக, பொதுமக்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தகுதியான பயனாளிகளுக்குக் கடனுதவி வழங்கும் பணிகள் தீவிரப்படுத்த ப்பட்டுள்ளன.

இதன் ஒரு பகுதியாக, திருவண்ணா மலை மாவட்டத்தில் செயல்படும் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அனைத்து கூட்டுறவு நிறுவன ங்களிலும் வாரந்தோறும் சிறப்புக் கடன் முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

இதன்படி, ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைகளில் மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்கள் மற்றும் வீட்டு வசதிக் கடன்களுக்கான சிறப்பு முகாம்கள் நடைபெறும்.



வெள்ளிக்கிழமைகளில் இதர முன்னுரிமைத் துறைக் கடன் திட்டங்களுக்கான சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

இந்த முகாம்கள் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான கடன்கள், மத்திய கால விவசாயக் கடன்கள், ஊரகத் தொழில் கடன்கள், வீட்டு வசதிக் கடன்கள், வீட்டு அடமானக் கடன்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்கள், திருநங்கையருக்கான கடன்கள், மின்சார ஆட்டோ வாங்குவதற்கான கடன்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் தகுதியானவர்களுக்குக் கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்ப ட்டுள்ளது.

குறிப்பாக, விவசாயம், சிறு தொழில்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் இதர முன்னுரிமைத் துறைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் இக்கடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

எனவே, கூட்டுறவு நிறுவனங்களின் கடன் திட்டங்கள் மூலம் பயன்பெற விரும்பும் தகுதியுள்ள பொதுமக்கள், தங்கள் பகுதிகளில் நடைபெறும் சிறப்புக் கடன் முகாம்கள் குறித்த விவரங்களைத் தெரிந்து கொண்டு, தேவையான ஆவணங்களுடன் முகாம்களில் பங்கேற்று கடனுதவி பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல்லில் வெங்காய வியாபாரி வீட்டில் 3 பவுன் தங்க நகை திருடிய சிறுமி உட்பட 2 பேர் கைது

திண்டுக்கல் நாயக்கர்புது தெரு பகுதியை சேர்ந்த வெங்காய வியாபாரி அசோக்குமார் (28) இவரது வீட்டில் கடந்த சில நாட்களுக்கு முன் 3 பவுன் தங்கச் செயின் திருடு போனது தொடர்பாக நகர் மேற்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இது குறித்து நகர் DSP.கார்த்திக் உத்தரவின் பேரில் நகர் மேற்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் நாராயணன் மற்றும் காவலர்கள் தீவிர விசாரணை மேற்கொண்டு அசோக்குமாரிடம் வேலை பார்த்த R.M.காலனியை சேர்ந்த வினோத்(19) மற்றும் 17 வயது சிறுமி ஆகிய 2 பேரை கைது செய்து அவர்களிடமிருந்து 3 பவுன் தங்க நகையை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ராணிப்பேட்டையில் அப்துல்கலாம் பிறந்தநாள் முன்னிட்டு ஏ.பி.ஜெ.அறக்கட்டளை சார்பாக அன்னதானம்



ராணிப்பேட்டையில் அப்துல்கலாம் பிறந்தநாள் முன்னிட்டு ஏ.பி.ஜெ. அறக்கட்டளை சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது!

ஏ.பி.ஜெ அறக்கட்டளை சார்பாக தலைவர் கோபிநாத் தலைமையில் ராணிப்பேட்டை விஷ்வாஸ் மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக் கான சிறப்புப் பள்ளியில் அறக்கட்டளை அன்னம் பகிர்வோம் திட்டம் மூலம் குழந்தைகளுக்கு அப்துல்கலாம் பிறந்தநாளை முன்னிட்டு இனிப்பு மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் தலைவர் கமலாகாந்தி மற்றும் ஆற்காடு நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ்பாண்டியன் உடன் அறக்கட்டளை நிர்வாக குழு உறுப்பினர் கிஷோர்குமார்

உறுப்பினர்கள் ஜெய்லா இர்பான் சுரேஷ் கலந்துகொண்டனர்கள்.

## பூந்தமல்லியில்

# 12 கிலோ கஞ்சா பறிமுதல்; இரண்டு குற்றவாளிகள் கைது

தமிழக முதலமைச்சர் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாகவும், ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவின்படியும், காவல் இணை ஆணையாளர் சிவகுமார் மேற்பார்வையிலும், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு உதவி ஆணையாளர் களியசுந்தரம் வழிகாட்டுதலின்படியும், பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் பிரபு தலைமையிலான போலீசார் கஞ்சா தொடர்பான ரகசிய தகவலின் பேரில், பூந்தமல்லி அரசு மருத்துவமனை அருகே கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது, அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக சுற்றித்திரிந்த ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த விவேக் (வ/23) மற்றும் சுஜன் (வ/23) ஆகிய இருவரையும் பிடித்து விசாரணை மேற்கொண்டு, அவர்களிடம் சோதனை செய்ததில், இருவரிடமும் தலா 6 கிலோ வீதம் மொத்தம் 12 கிலோ கஞ்சா இருப்பது கண்டறியப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டது.

இதையடுத்து, குற்றவாளிகள் இருவரையும் கைது செய்து, பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் வழக்குப் பதிவு செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.









# பாணாவரம் அருகே மின்னல் தாக்கி பசுமாடு பலி

ராணிப்பேட்டை மாவட்டம் பாணாவரம் அடுத்த கோவிந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ணன்(65)விவசாயி. இவருக்கு சொந்தமான பசுமாடு ஒன்றை, அதேப் பகுதியில் உள்ள தமக்கு சொந்தமான விவசாய நிலத்தில் மேய்ச்சலுக்காக கட்டி வைத்துள்ளார்.

அப்போது நேற்று மத்தியம் திடிரென இடி மின்னலுடன் கன மழை பெய்துள்ளது. இதில் கன மழையின் போது பசுமாட்டின் மீது மின்னல் தாக்கி சம்பவ இடத்திலேயே பலியாகி உள்ளது.

இச்சம்பவத்தை பார்த்த அப்பகுதி பொதுமக்கள் வருவாய் துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவலின் பேரில் பாணாவரம் வருவாய் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதி விவசாயிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் மின்னல் தாக்கி இறந்த பசுமாட்டிற்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் இப்பகுதி பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# பழனி இடும்பன் கோவில் நகைகள் திருட்டு: பெண் ஊழியர் உட்பட இருவர் கைது

திண்டுக்கல் மாவட்டம், பழனி இடும்பன் கோவில் அலுவலகப் பீரோவில் வைக்கப்பட்டிருந்த 20 பவுன் தங்க நகைகள் மற்றும் சுமார் 3 கிலோ வெள்ளி ஆபரணங்கள் திருடப்பட்டதாக கடந்த 30.05.2026 அன்று பழனி நகர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது.

இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. ஜெயக்குமார் உத்தரவின்பேரில், தனிப்படை அமைத்து போலீசார் விசாரணை நடத்தினர். இதில், கோவில் அலுவலகத்தில் தற்காலிகப் பணியாளராகப் பணிபுரிந்த நிரஞ்சனா மற்றும் அவரது ஆண் நண்பர் பிரபாகரன் ஆகியோர் திருட்டில் ஈடுபட்டது தெரியவந்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து இருவரையும் கைது செய்த போலீசார், திருடப்பட்ட 20 பவுன் தங்க நகைகள் மற்றும் சுமார் 3 கிலோ வெள்ளி ஆபரணங்களை மீட்டனர். தொடர்ந்து இருவரையும் நீதிமன்றக் காவலுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரம் பூங்கா ரோடு பகுதியில் பாதாளை சாக்கடைக்காக தோண்டப்பட்ட குழியில் கனரக வாகனம் இறங்கி உள்ளது இது போன்ற சாலையில் பேரிக்காடுகள் வைக்கப்படாததால் இந்த நிலை அடிக்கடி இப்பகுதியில் நடந்து கொண்டே இருக்கிறது இதைக் கண்டு கொள்ளாத அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சார்பாக கோரிக்கை வைத்துள்ளனர்



# திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம்,மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்திய "மாபெரும் கல்விக்கடன்" முகாம்

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், வீரராகவபுரம், திருவேற்காடு பகுதியில், தனியார் பொறியியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்திய "மாபெரும் கல்விக் கடன்" முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். ரமேஷ்குமார் (ஆவடி), எஸ்.விஜயகுமார் (கும்மிடிப்பூண்டி), ஆர். பிரகாசம் (பூவிருந்தவல்லி), மரு.எம். எஸ்.ரவி (பொன்னேரி) ஆகியோர் முன்னிலையில் 95 மாணவ–மாணவியருக்கு ரூ.7.06 கோடி மதிப்பீலான கல்விக் கடன் ஆணைகளை வழங்கி, குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

மாவட்ட வழங்கல் அலுவலர் முத்துலட்சுமி, இந்தியன் வங்கி மண்டல மேலாளர் ர.சீனிவாசன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் தென்னரசு, தனியார் கல்லூரி தலைவர், முதல்வர், பேராசிரியர்கள், திரளான கல்லூரி மாணவ–மாணவியர்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட/தனியார் வங்கிகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.




திண்டுக்கல் மாவட்டம் பழனி இந்து வியாபாரிகள் நல சங்கம் நடத்தும் இந்து வணிகர்கள் தின விழா ஆறாம் ஆண்டு விழா பழனி தனியார் மண்டபத்தில் நடைபெற்றது

## இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# காலநிலை மாற்ற இயக்கத்தில் தொழில்நுட்ப உதவியாளர் பணி



தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் செயல்பட்டு வரும் இராணிப்பேட்டை மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தின் கீழ், தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பணிக்கு மாதம் ரூ.22,000 ஊதியம் வழங்கப்படும். ஒப்பந்த அடிப்படையில் 19 மாதங்களுக்கு பணியிடம் நிரப்பப்பட உள்ளது. கல்வித் தகுதி: உயிரியல் அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல், விலங்கியல், வனவியல், வனவிலங்கு அறிவியல், பொது கொள்கை, பொருளாதாரம் உள்ளிட்ட தொடர்புடைய துறைகளில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். அரசுத் திட்டங்கள் குறித்த அறிவு, கணினியில் MS Word, MS Excel, MS Pow–erPoint ஆகியவற்றைப் பயன்படுத்தும் திறன், தரவுப் பதிவு மற்றும் மேலாண்மை, அலுவலகப் பணிகள் மற்றும் ஒருங்கிணைப்புத் திறன் ஆகியவை அவசியம். விண்ணப்பிக்கும் முறை: தகுதியுள்ளவர்கள் தங்களது புதுப்பிக்கப்பட்ட சுயவிவரம் (Resume/CV), கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பணி அனுபவ விவரங்களுடன் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கலாம். மின்னஞ்சல் முகவரிகள்: ranipetdfo@gmail.com cmgfp.rpt@gmail.com மின்னஞ்சலின் தலைப்பில் *Application for Technical Assistant District Climate Change Mission, Ranipet* எனக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க கடைசி நாள் 20.10.2026 ஆகும். மேலும் விவரங்களுக்கு இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரகம் அல்லது மாவட்ட வன அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம்

## திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கி வரும்

# அனைத்து செல்லப் பிராணிகள் விற்பனை நிலையங்களும் தமிழ்நாடு பிராணிகள் நலவாரியத்தில் பதிவு செய்ய வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.கவிதா தகவல்

தமிழ்நாட்டில் இயங்கி வரும் அனைத்துச் செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்களும் ஒன்றிய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் அறிவிக்கை GSR 844 (E) நாள்.06.09.2018, பிராணிகள் வதை தடுப்பு (செல்லப் பிராணிகள் விற்பனை நிலையம்) விதிகள் 2018–இன்படியும், ஒன்றிய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் அறிவிக்கை GSR 496(E) நாள்.23.05.2017, பிராணிகள் வதை தடுப்பு சட்டப்படி (நாயினப் பெருக்கம் மற்றும் விற்பனை விதிகள்) 2017–இன்படியும் தமிழ்நாடு பிராணிகள் நலவாரியத்திடம் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டும். இந்நிலையில் இவ்வறிவிப்பை பின்பற்றி திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கி வரும் அனைத்து விற்பனை நிலையம் மற்றும் நாயினப் பெருக்கம் மற்றும் விற்பனை செய்யும் பதிவு செய்யாத நிறுவனங்கள் அனைத்தும் தமிழ்நாடு பிராணிகள் முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு பிராணிகள் நலவாரியம், *13 –1E 3rd Sea ward Road*, வால்மீகி நகர், திருவான்மியூர்–600 041. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாதிரி செல்லப்பிராணிகள் விற்பனை நிலையம்



நலவாரியத்திடம் (*Tamil Nadu Animal Welfare Board*) மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணையதளத்தில் விண்ணப்ப படிவங்களை பதிவிறக்கம் செய்து முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை இணைய முகவரி: <https://tnawb.in.gov.in/>, முகவரி: மேலும் பதிவு செய்யாமல் தொடர்ந்து இயங்கும் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.

# உழவன் செயலியைப் பயன்படுத்தும் முறை குறித்து மாணவர்கள் விளக்கம்







தேனி மாவட்டம், சின்னமனூர் அருகே உள்ள காமாட்சிபுரம் கிராமத்தில், சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் RAWE திட்டத்தின் கீழ், மாணவர்கள் து.லோகேஸ்வரன், பூ. ராஜேஷ், சு. விஷ்வா, து. கௌதமன், ச. சேகுவாரா சமயன், கொ. அசோக்குமார், ஆ. ஸ்ரீராம். விவசாயிகளுக்கு உழவன் செயலியைப் பயன்படுத்தும் முறை குறித்து விளக்கமளித்தனர் இந்நிகழ்ச்சியில், உழவன் செயலியை மொபைல் போனில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தும் முறை, பயிர்க் காப்பீட்டுத் திட்டங்கள், மானிய விவரங்கள், விதை மற்றும் உரங்கள் தொடர்பான தகவல்கள், வானிலை முன்னறிவிப்பு, வேளாண் ஆலோசனைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் குறித்து மாணவர்கள் எடுத்துரைத்தனர் மேலும், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் தகவல்களைத் தாங்களே மொபைல் போன் மூலம் எளிதாகப் பெறுவது குறித்தும், அரசின் வேளாண் திட்டங்களை அறிந்து பயனடைவது குறித்தும் விளக்கினர் இதன் மூலம் விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வேளாண் பணிகளைத் திட்டமிடவும், அரசின் நலத்திட்டங்களை அறிந்து பயன்பெறவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# அழிஞ்சிவாக்கம் ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ. 72.68 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நான்கு வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு விழா

மாதவரம் தொகுதி புழல் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட அழிஞ்சிவாக்கம் ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நபார்டு நிதி உதவி திட்டத்தின் கீழ் ரூபாய் 72 லட்சத்து 68 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நான்கு வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு விழாவிற்கு புழல் வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர் விமலா, வட்டார கல்வி அலுவலர் ராஜேந்திரன், பள்ளி தலைமையாசிரியர் ஓ.வி. நாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச்செயலாளருமான எம்.எல். விஜய் பிரபு கலந்துகொண்டு கட்டி முடிக்கப்பட்ட புதிய வகுப்பறை கட்டிடத்தை திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றி வைத்து, பள்ளி மாணவ மாணவிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கி இனிப்புகளை வழங்கினார்.

விழாவில் தவெக புழல் ஒன்றியச் செயலாளர் என். எஸ். மைக்கேல்ராஜன், உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார், ஊராட்சி செயலர்கள் இனியவன் (அழிஞ்சிவாக்கம்), பொன்னையன் (புள்ளிலைன்), உல்லாசம் (தீர்த்தக்கிரியம்பட்டு), பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் ஸ்ரீபானுமதி, ஆசிரிய – ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள், தவெக புழல் ஒன்றியம் மற்றும் மாவட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாக 16.10.2026 வெள்ளிக்கிழமை காலை பழனி கோட்டாட்சியர் அலுவலகம் எதிரில் கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை முழக்க போராட்டம் நடைபெற்றது. 100 நாள் வேலை சம்பள பாக்கியை வழங்க கோரியும், வேலை அட்டை வைத்துள்ள அனைவருக்கும் வேலை வழங்க கோரியும் ,கருவிழி வருகை பதிவை ரத்து செய்ய கோரியும், 200 நாள் வேலை வழங்கிடவும், சம்பளம் 700 ரூபாயாக உயர்த்த கோரியும் போராட்டம் நடைபெற்றது.ஒன்றிய தலைவர் ஆர். முருகானந்தம், தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் கே.ரமேஷ் முன்னிலை வகித்தார். மாவட்ட தலைவர் கே.ஆர். பாலாஜி துவக்கவுரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் கே.அருள்செல்வன் நிறைவுரை ஆற்றினார். மாவட்ட குழு உறுப்பினர் எம்.சாந்தாமணி, ஒன்றிய நிர்வாகிகள் பேச்சியம்மாள், என்.பிச்சைமுத்து, டி.துரைச்சாமி, பி.முருகன்,உள்ளிட்டோர் பங்கேற்றனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் ஆர். ஈஸ்வரன், மாதர் சங்க ஒன்றிய செயலாளர் ஜி.கௌரி,கட்டுமான சங்க ஒன்றிய செயலாளர் சி.பெரியசாமி,விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் என்.பாண்டியன், வாலிபர் சங்க ஒன்றிய செயலாளர் டக்ளஸ் செல்வா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒன்றிய பொருளாளர் எம்.கோப்பணன் நன்றி கூறினார். நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

### செய்யாறில் நகராட்சி மூலம் சேகரிக்கப்பட்ட

# குப்பைகளிலிருந்து செழிப்பு பசுமை உரம் உழவர் சந்தை பகுதியில் நுகர்வோருக்கு விற்பனை

## ஆணையாளர் தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் நகராட்சி மூலம் சேகரிக்கப்பட்ட குப்பைகளிலிருந்து செழிப்பு பசுமை உரம் உழவர் சந்தை பகுதியில் நுகர்வோருக்கு விற்பனை ஆணையாளர் சே.ஆண்ரூஸ் இன்று காலை தொடங்கி வைத்தார். திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் நகராட்சிக்குட்பட்ட நுண்ணுயிர் மையங்களில் தயாரிக்கப்படும் இயற்கை உரமான செழிப்பு பசுமை உரம் உழவர் சந்தை பகுதியில் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையிலான விற்பனையை நகராட்சி ஆணையாளர் சே.ஆண்ரூஸ் இன்று காலை தொடங்கி வைத்தார்.




நிகழ்ச்சியில் நகராட்சி துப்புரவு ஆய்வாளர் கே. மதனராசன், தூய்மை பணியாளர்கள், உழவர் சந்தை பணியாளர்கள் உள்ளத்தில் கலந்து கொண்டனர்.

நுகர்வோர்களுக்கு செழிப்பு பசுமை உரத்தினை பொது மக்களுக்கு குறைந்த விலையில் வழங்கினர்.

# உயிர் காக்கும் மயக்கவியல் மருத்துவம்; திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரியில் சிறப்பு கருத்தரங்கம்

உலக மயக்கவியல் தினத்தை முன்னிட்டு, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரியில் மயக்கவியல் மற்றும் அறுவை அரங்க நுட்பவியல் மாணவ, மாணவிகளுக்கான சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. மயக்கவியல் மருத்துவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்ததுடன், மாணவர்களின் திறன் மேம்பாடு, வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கான முயற்சிகளும் நிகழ்ச்சியில் எடுத்துரைக்கப்பட்டன.




ஆண்டுதோறும் அக்டோபர் 16–ம் தேதி உலக மயக்கவியல் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. 1846–ம் ஆண்டு அக்டோபர் 16–ம் தேதி, அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் பொது மருத்துவமனையில் வில்லியம் டி.ஜி. மோர்ட்டன், ஈதரை மயக்க மருந்தாகப் பயன்படுத்தி அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து காட்டினார். வலியைக் குறைத்து அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள உதவிய இந்த முன்னேற்றம், மருத்துவ வரலாற்றில் முக்கிய மைல்கல்லாக அமைந்தது. இதனை நினைவுகூரும் வகையில் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் எட்வினா வசந்தா தலைமை தாங்கி சிறப்புரையா ற்றினார். மருத்துவக் கண்காணிப்பாளர் மாலதி, துணை முதல்வர் சங்கீதா, நிலைய மருத்துவ அலுவலர் கதிர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மயக்கவியல் துறைத் தலைவர் பேராசிரியர் பாலமுருகன் வரவேற்றுப் பேசினார். கடந்த ஐந்து ஆண்டுகளில் மயக்கவியல் மருத்துவர்களின் தீவிர சிகிச்சை மற்றும் தொடர் கண்காணிப்பின் மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயிர் பிழைத்த 10 நோயாளிகள் குறித்த தகவல்களை அவர் எடுத்துரைத்தார்.

உயிருக்கு ஆபத்தான சூழல்களில் நோயாளிகளைக் காப்பாற்றுவதில் மயக்கவியல் மருத்துவர்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது என்பதையும் விளக்கினார்.

மயக்கவியல் மற்றும் அறுவை அரங்க நுட்பவியல் மாணவ, மாணவிகளுக்காக இத்தகைய கருத்தரங்கு நடத்தப்படுவது முக்கியமான முன்னெடுப்பு என்று குறிப்பிட்ட அவர், மாணவர்களின் கல்வி மற்றும் தொழில் வளர்ச்சிக்காகத் தனி உதவி எண் ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், இறுதியாண்டு மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுத்தரும் நோக்கில் வளாக நேர்காணல்களை நடத்தவும் திட்டமிட்டுள்ளதாகக் கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய கல்லூரி முதல்வர் எட்வினா வசந்தா, மயக்கவியல் மருத்துவத்தின் அவசியத்தையும், அறுவை சிகிச்சைகளின்போது மயக்கவியல் மருத்துவர்கள் மேற்கொள்ளும் முக்கியப் பணிகளையும் விளக்கினார். நோயாளிகள் அறுவை சிகிச்சையின்போது வலியின்றி இருப்பதையும், அவர்களின் உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்படுவதையும் உறுதி செய்வதில் மயக்கவியல் மருத்துவர்களின் பங்கு இன்றியமையாதது என்று பாராட்டினார்.

மாணவர்களின் கல்வி, திறன் மேம்பாடு, வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்புக்காக மேற்கொள்ளப்படும் இத்தகைய முன்மாதிரியான முயற்சிகளைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உயிருக்கு ஆபத்தான சூழல்களிலும் நோயாளிகளின் உயிரைக் காக்கப் பணியாற்றும் மயக்கவியல் மருத்துவர்களின் சேவையைப் போற்றும் வகையிலும், இத்துறையில் பயிலும் மாணவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் நோக்கிலும் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

# சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படைத்திட்டம்

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் காவல்துறையின் புதிய முன்னெடுப்பு மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்து, அச்சமின்றி




வாழ்வதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்கும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படைத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் கடந்த 09.06.2026 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனடிப்படையில், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், அவர்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழாமல் முன்கூட்டியே தடுக்கும் நோக்கில் தமிழ்நாடு காவல்துறையின் சார்பில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகள் அச்சமின்றிப் பொதுமக்கள் கூடும் இடங்கள். கல்வி நிறுவனங்கள். பணிபுரியும் இடங்கள் மற்றும் பிற பொது இடங்களுக்குச் சென்று வருவதை உறுதி செய்வதற்காக இச்சிறப்புப் படை உருவாக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழக்கூடிய பகுதிகளைக் கண்டறிந்து கண்காணித்தல், ரோந்துப் பணிகளை மேற்கொள்ளுதல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும் பாதிக்கப்படுவோருக்கு உரிய உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளை இச்சிறப்புப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக அச்சம் அல்லது தயக்கம் காரணமாகப் புகார் அளிக்காமல் இருப்பவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இத்தகைய நிகழ்ச்சிகளின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு நேர்ந்த பாதிப்புகளைத் துணிச்சலுடன் தெரிவிக்க முன்வருகின்றனர். இதன் மூலம் முன்பு வெளியில் தெரியாமல் இருந்த குற்றங்கள் காவல்துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வழிவகை ஏற்படுகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, குற்றங்கள் நிகழ்ந்த பின்னர் நடவடிக்கை எடுப்பதுடன் நின்றுவிடாமல், குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும் இச்சிறப்புப் படை முக்கியத்துவம் அளிக்கிறது. பாதுகாப்பற்ற பகுதிகளைக் கண்காணித்தல், பெண்களிடம் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அவசரகாலங்களில் காவல்துறையின் உதவியை நாடுவதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதில் இத்திட்டம் முக்கியப் பங்காற்றுகிறது.

தேனி மாவட்டத்தில் இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளான 09.06.2026 முதல் 16.10.2026 வரை சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் களப்பணிபிரிவுகள் 314 புகார்களுக்கு சம்பவ இடத்திலேயே நேரடியாகச் சென்று நடவடிக்கை மேற்கொண்டனர். 19 போக்சோ வழக்குகள் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் தொடர்பாக 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.மேலும், காணாமல் போன 06 பெண்கள் மற்றும் 09 குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாப்பாக அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மேலும் 18 குழந்தைத் திருமணம் தடுத்து நிறுத்தப்பட்டதுடன், பள்ளிப் படிப்பை இடைநிறுத்திய 126 மாணவர்கள் மீண்டும் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக குற்றத் தடுப்பு மற்றும் சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாக 1452 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ள, பொதுமக்கள் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் உதவி எண்



அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆண்டிபட்டி

1091–ஐ தொடர்பு கொள்ளலாம். மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவோ அல்லது பாதுகாப்பற்றதாகவோ கருதப்படும் இடங்கள் மற்றும் பகுதிகள் குறித்த தகவல்களையும் பொதுமக்கள் 1091 உதவி எண்ணில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை உரிய தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தேவையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இந்தத் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் மூலம், தமிழ்நாடு முழுவதும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் உறுதியான சூழலை உருவாக்குவதில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

### தேனி மாவட்டத்தில் Hot Spot பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள இடங்களில்

# மதுப்பழக்கத்திற்கு அடிமையாதல், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதல், போதைப்பழக்கத்திற்கு அடிமையாதலுக்கு எதிராக பள்ளிகள், கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இஆப், அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தேனி மாவட்டத்தில் *Hot Spot* பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள இடங்களில் மதுப்பழக்கத்திற்கு அடிமையாதல், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதல் மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையாதலுக்கு எதிராக பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டு அக்டோபர் 2026 மாதத்தில் கீழ்க்கண்ட பள்ளிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளது.

| வ.எண். | கலை / விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ள பள்ளிகள் / கல்லூரிகள் | நாள் |
|---|---|---|
| 1. | ZKM மேல்நிலைப்பள்ளி – போடிநாயக்கனூர் | 21.10.2026 |
| 2. | NSKP மேல்நிலைப்பள்ளி – கூடலூர் | 22.10.2026 |
| 3. | கள்ளர் மேல்நிலைப்பள்ளி – இராஜதானி | 23.10.2026 |
| 4. | அரசு மேல்நிலைப்பள்ளி – தேவதானபட்டி | 27.10.2026 |
| 5. | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி – பெரியகுளம் | 28.10.2026 |
| 6. | நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி – தேனி | 29.10.2026 |
| 7. | CPA மேல்நிலைப்பள்ளி – கம்பம் | 30.10.2026 |

மேற்கண்டவாறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் உதவி ஆணையர்(கலால்), மாவட்ட நியமன அலுவலர் (உணவு பாதுகாப்புத்துறை), மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல்துறையினர், சமூக நலத்துறை அலுவலர், குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சித்துறை அலுவலர்களால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: G.RAJA